# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2011/25 - 2017 මාර්තු මස 24 වැනි සිකුරාදා - 2017.03.24

*2011/25 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வட மாகாண மாகாண சபை**

***1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகளின் (நியமத் துணைவிதிகள்) சட்டம்***

வடமாகாண உள்ளூர் அதிகார சபைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட நியமத் துணைவிதிகள்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆவது உப பிரிவில் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தான தத்துவங்களின் பிரகாரம் வட மாகாணத்தின் முதலமைச்சரும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, சமூக சேவைகளும், புனர்வாழ்வளித்தலும், மகளிர் விவகாரம், மின்சக்தி, வீடமைப்பு நிர்மாணமும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும், சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம் ஆகியவற்றின் அமைச்சருமாகிய க. வி. விக்னேஸ்வரன் ஆகிய என்னால் ஆக்கப்பட்ட -

1. வட மாகாண மாநகர சபை நியமத்துணை விதிகளுக்கான வரைவு (அத்தியாயம் 1 முதல் அத்தியாயம் 6 வரை) 2016.02.02 ஆந் திகதிய 1952/14 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி மூலமும் ;
2. வட மாகாண நகர சபை நியமத்துணை விதிகளுக்கான வரைவு (அத்தியாயம் 1 முதல் அத்தியாயம் 6 வரை) 2016.02.02 ஆந் திகதிய 1952/15 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி மூலமும் ;
3. வட மாகாண பிரதேச சபைகளுக்கான நியமத்துணை விதிகளுக்கான வரைவு (அத்தியாயம் 1 முதல் அத்தியாயம் 6 வரை) 2016.02.02 ஆந் திகதிய 1952/16 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி மூலமும் வெளியிடப்பட்டுள்ளன.

வட மாகாணத்திலுள்ள மாநகர சபை, நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கான மேலே கூறப்பட்ட நியமத்துணை விதிகள் வடக்கு மாகாணத்தின் மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டு 2017.02.21 ஆந் திகதி அன்று வடக்கு மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பது இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

க. வி. விக்னேஸ்வரன்,
முதலமைச்சர் மற்றும் நிதியும், திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும்,
காணி, சமூகசேவைகளும் புனர்வாழ்வளித்தலும் மகளிர்
விவகாரம், மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும்
தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடு,
சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக விடயங்களுக்குப்
பொறுப்பான அமைச்சர்,
வட மாகாண மாகாண சபை.

முதலமைச்சரின் அமைச்சு,
A- 9 வீதி, கைதடி,
2017, மாச்சு 15

4- 144




*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*